**வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனித் தொழிற்சாலை – 2016**

---

வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற மீளாய்வாண்டிற்கான தொழிற்சாலையின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள்

தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி தொழிற்சாலையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

# 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது, நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும், கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் பின்வருமாறு உள்ளன.

(ஆ) பாதகமான அபிப்பிராயத்திற்கு விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்விற்கு தேவையான போதுமான தகவல்கள் மற்றும் விளக்கங்கள் பெறப்பட்டிருக்காததுடன் தொழிற்சாலை கணக்குகளின் அறிக்கைகளை முறையாக பேணியிருக்கவில்லை.

(இ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனியின் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட தேவைப்பாடுகளுடன் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.

(ஈ) கம்பனிகள் சட்டத்தின் 220 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02

2010 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியிலிருந்து மிகுதியாகவிருந்த ரூபா 17,410 பெறுமதியான விவசாய உணவு இருப்பொன்று இருப்புப் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் நடைமுறை ஆண்டின் போது புத்தகங்களிலிருந்து இந்த இருப்பினை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

---

(i) சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அல்லது பயன்படுத்தப்பட்ட திகதிகளினைக் கருத்திற் கொள்ளாது மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 47,843,636 பெறுமதியான நிலையான சொத்துக்கள் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது.

(ii) 2009 திசெம்பர் 31 இற்கு முன்னிலிருந்து நடைமுறையில்லாச் சொத்துக்களின் கீழ் தொடர்ந்து காணப்பட்ட ரூபா 840,774 பெறுமதியான நடைமுறை வேலைகளின் மீதிக்கான சரிப்படுத்தல்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 திசெம்பர் 31 வரை நிதிக்கூற்றுக்களிலுள்ள ரூபா 2,654,357 தொகையான காணிகளுக்கான பெறுமானத்தேய்வு பெறுமதியினை திருத்துவதற்கு தொழிற்சாலையினால் மீளாய்வாண்டு வரையேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

தொழிற்சாலையின் செலவினங்களினை மேவுகை செய்வதற்காக பொதுத் திறைசேரியிடமிருந்து 1993 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 554,790,332 தொகையொன்று நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் மீதி கீழ்க்கொண்டுவரப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

---

பின்வரும் விடயங்களுக்கு எதிராகக் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால் கணக்காய்வில் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி ரூபா | கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்படாத சான்றுகள் |
|---|---|---|
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் | 51,183,525 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| பெறவேண்டியவை மற்றும் முன் செலுத்தப்பட்ட மீதிகள் | 40,832,835 | |
| ஊழியர்களின் சம்பளங்கள் | 955,314 | ஏப்ரல் மாதத்திற்கான சம்பளப் பட்டியல் |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 1993 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்சாலைக்கு வெளித்தரப்பு முதலீட்டாளரொருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 14,036,357 மீதியொன்று 2016 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 செப்தெம்பர் 09 ஆந் திகதி முதல் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையான 607 நாட்களுக்காக கரும்பு கட்டும் 700 சங்கலிகள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனிக்கு வழங்கியதன் மூலம் அறவிடப்படவேண்டி ரூபா 4,249,000 வாடகைப் பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு தொழிற்சாலை தவறியிருந்தது.

(இ) 1988 ஆம் ஆண்டிலிருந்து 2010 மே மாதம் வரையான காலப்பகுதிக்கு தொழிற்சாலையினால் இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 76,352,246 மீதியினை 2016 திசெம்பர் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யாது அட்டுறுச் செலவினத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 1993 ஆம் ஆண்டிலிருந்து மீதி கீழ்கொண்டுசென்ற இருப்புக்களின் கீழுள்ள 12 பேரேட்டுக் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 1,924,611 கடன் மீதிகள் மற்றும் கடன்பட்டோர் மீதிகளின்கீழுள்ள 03 பேரேட்டுக் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 45,397 கடன்பட்டோர் மீதிகள் மற்றும் வரவு மீதிகளினை அறவிடுவதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (அ) நிதிப்பிரமாணம் 156 (5) மற்றும் (6) | கணக்குகளில் அல்லது அதனுடன் தொடர்புடைய ஏதேனுமொரு ஆவணமொன்றில் அல்லது அழித்தல் காணப்பட கூடாததுடன் கணக்குகள் தொடர்பான அனைத்து கடிதங்கள் மற்றும் ஏடுகள், புத்தகங்கள், அறிக்கை குறிப்புக்கள், பதிவேடுகள் போன்றன முறையாக அகற்றப்படும் வரை உரிய கிரமத்தில் மற்றும் உயர்ந்த நிலையிலான பாதுகாப்பில் வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் தொழிற்சாலையின் காசுப் புத்தகம் மற்றும் ஏனைய பேரேட்டுக் கணக்குகள் அதற்கமைய பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப் பிரமாணம் 757 (அ) | இருப்புப் புத்தகம் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு சமப்படுத்தப்பட்டிருக்காததுடன் இருப்புக்கள் மற்றும் நிலையான சொத்துக்களுக்கான பௌதீக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

-------------------------------

### 3.1 நிதிசார் விளைவுகள்

---------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது தொழிற்சாலையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,678,186 பற்றாக்குறையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 151,583 ஆனமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,829,769 ஆன பற்றாக்குறையொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிர்வாகச் செலவினம் ரூபா 1,262,414 இனால் அதிகரித்தமை மற்றும் திறைசேரி மானியங்கள் ரூபா 1,082,963 இனால் குறைவடைந்தமை, மேற்குறித்த பற்றாக்குறைக்கு பிரதான காரணமாகக் காணப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

--------------------------------------------------------

தொழிற்சாலையின் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை அரசாங்கம் சார்பில் நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் SLI Developers (Pvt) Ltd மற்றும் MG Sugar Lanka (Pvt) Ltd கம்பனிகளுக்கிடையே 2016 ஆகஸ்ட் 11 இல் பங்காளர் உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உடன்படிக்கையின் பிரகாரம், முதலீட்டாளர்களுக்கு காணிகளினைக் கையளிப்பதற்கான செயற்பாடுகள் காணிகள் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 சனவரி வரை அந்த செயற்பாடுகள் அடையப்பெற்றிருக்கவில்லை. மேலும், தொழிற்சாலையினால் உரிமையைக் கொண்டுள்ள 96 அலுவலக தங்குமிடங்களில் ஆக்கிரமிப்பினைக் கொண்டுள்ளவர்கள் இனங்காணக்கூடியதாகவிருந்தது.

(ஆ) கந்தளாய் சீனி தொழிற்சாலையின் மறுசீரமைப்புடன் தொடர்புடைய செயற்பாடுகளினை துரிதப்படுத்துவதன் மூலம் 03 மாதங்களுக்குள் செயற்பாடுகளினை ஆரம்பிப்பதற்கு முதலீட்டாளர்களுடன் இணைந்து காணிகள் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என நிதி அமைச்சின்

செயலாளர்க்கு 2017 சனவரி 30 இன் எச்எவ் /பீஈ/சீஎம் /2017/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நிதி அமைச்சினால் வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 சனவரி வரையிலும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதம அமைச்சு செயலாளரின் 2017 மார்ச் 17 இன் பீஎம்ஓ/01/ஏஸ்ஆர்(சீசீஈஎம்) 2017/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் சொத்துக்கள் விற்பனைக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நோக்கத்தினை 06 மாதங்களுக்குள் பூர்த்தி செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2018 சனவரி வரையிலும் கழிவகற்றல் செயற்பாடு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தொழிற்சாலையினை புதிய முதலீட்டாளருக்கு கையளிக்கும் வரை தொழிற்சாலையின் செயற்பாடுகளுக்கு தேவையான இரண்டு அல்லது மூன்று ஊழியர்கள் உள்ளடங்களாக பொது முகாமையாளர் தவிர, ஊழியர்களின் ஒப்பந்தக் காலப்பகுதியினை உடனடியாக முடிவுறுத்துவதற்கு நிதி அமைச்சர் வழிகாட்டியிருந்த போதிலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2018 சனவரி வரையில் இணைக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 37 ஆகக் காணப்பட்டது.

## 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

1993 செப்தம்பர் 01 இலிருந்து 16,320 சீனியின் எம்ரீ வருடாந்த உற்பத்தி இயலளவு, 9,000 சீனிப்பாகு எம்ரீ மற்றும் 3.9 மில்லியன் லீற்றர் வடிகட்டிய மதுசாரத்துடன் கந்தளாய் சீனி தொழிற்சாலை அரசாங்கத்திற்கு தற்காலிகமாக கையளிக்கப்பட்டிருந்ததுடன் 1994 மார்ச் 31 இற்கு பின்னர் எவ்வித உற்பத்தி செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

தொழிற்சாலைக்கு சொந்தமான ரூபா 25,493,500 பெறுமதியான 213 விளக்குகள் மற்றும் கணரக மோட்டார் வாகனங்கள் அண்ணளவாக 23 வருடங்கள் காலப்பகுதியொன்றாக தொழிற்சாலையின் வளாகத்தில் சிதைவடைந்து பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்படுகின்றன.

## 4.4 ஏனைய அரச நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட தொழிற்சாலையின் வளங்கல்கள்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் தொழிற்சாலைக்குச் சொந்தமான மோட்டார் வாகனமொன்று காணிகள் அமைச்சுக்கு கையளிக்க்பட்டிருந்ததுடன் இந்த மோட்டார் வாகனத்தின் திருத்தங்கள் மீதான செலவினமொன்றாக தொழிற்சாலையினால் மீளாய்வாண்டில் ரூபா 380,300 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

சேவையிலுள்ள தொழிற்சாலையின் சொத்துக்களின் பாதுகாப்பிற்கான ஊழியர்கள் 33 ஆகவும் மற்றும் உத்தியோகத்தர்கள் 4 ஆகவும் உள்ளடக்கியதகாக 37 ஆகக் காணப்பட்ட போதிலும், எவ்வித அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரையும் கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், தலைவரொருவர் அல்லது பணிப்பாளர் சபையொன்றுக்கான தொழிற்சாலையின் தொழிற்பாடுகள் தற்போது நியமிக்கப்பட்டிருக்காததுடன், அமைச்சின் மேற்பார்வையின் கீழ் பொது முகாமையாளரொருவரினால் மேற்கொள்ளப்படுகின்றது.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டு அறிக்கைகள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2017 யூன் 20 இல் மாத்திரம் தொழிற்சாலையினால் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

# 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தொழிற்சாலையின் பொது முகாமையாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | ---------------------------------------- | --------------------------------- |
| (அ) | கணக்கீடு | ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களினைப் பின்பற்றாது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றமை. |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | இருப்பு மதிப்பீடொன்று மேற்கொண்டு காலாவதியான இருப்புக்களை அகற்றுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |
| (இ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | பௌதீக மதிப்பீடொன்றை மேற்கொண்டு அகற்றப்பட வேண்டிய சொத்துக்களை இணங்காண்பதற்கு மற்றும் அதற்கமைய நடவடிக்கையினை எடுப்பதற்கு தவறியமை. |
| (ஈ) | மனித வளங்கல் கட்டுப்பாடு | மனித வளங்களை உத்தமமாகவும் வினைத்திறனான வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |